Registered as a Newspaper      பக்கங்கள் 6      விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   மக்கள் தினசரி People's Daily

நாதம் 5   திருவள்ளுவர் ஆண்டு 2025   சித்திரை 5   (18.4.94)   திங்கட்கிழமை   ஓசை 59

பொது நூலகம் 18-4-1994 யாழ்ப்பாணம்

## அதிக விலையில் அரிசி விற்ற வர்த்தகர் மீது நடவடிக்கை

பொது மக்களுக்கு அதிக விலையில் அரிசியை விற்றமைக்காக ஏராளமான வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந் நடவடிக்கை தொடர்ந்தும் எடுக்கப்படும் எனவும் தமிழீழ காவல் துறையினரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. இது குறித்து காவல் துறையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தற்போதைய போராட்ட சூழ்நிலையில் சிங்கள அரசானது தமிழீழ மக்களுக்கெதிராக திட்டமிட்ட முறையில் இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை உலகம் நன்கறியும். இதில் பொருளாதாரத்தடை முக்கியமானதொன்றாகும். இவற்றை முறியடித்து எமது மக்களின் நலனைப் பாதுகாக்கும் பாரிய (6ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு பொது அறிவு போட்டி முடிவுகள் வெளியாகின

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வின் தேசிய, கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 6 முதல் 12—13 வரையான 7 பிரிவுகளிலும் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

வடதமிழீழத்தில் உள்ள 30 கல்விக் கோட்டங்களில் நடத்தப்பட்ட இப் பொதுத் தேர்வில் கோட்ட மட்டத்தில் முதலிரு இடங்களைப் பெறும் 7 பிரிவு மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் சிறப்புப்பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்குகின்றனர்.

அன்னை பூபதி நினைவு நாளான நாளை இப்பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்திலும், பளைக் கோட்டத்திலும் தேசிய கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கான பரிசுகள் உரும்பராயில் உள்ள அன்னை பூபதி கலையரங்கத்தில் நாளை காலை 10 மணிக்கு (2ஆம் பக்கம் பார்க்க)

## நாளை அன்னை பூபதி நினைவுநாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவஞ்சலி நிகழ்வுகள் யாழ். குடாநாடு எங்கும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்னை பூபதி நினைவுக் கட்டங்கள் நாளை கோட்ட ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வீதிகள், காரியாலயங்கள், பொது இடங்கள், வீடுகள் எங்கும் அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

உண்ணா விரதங்கள். சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் குடா நாட்டின் பல இடங்களில் வர்ணக் கொடிகளும் அன்னை பூபதியின் தியாகத்தை வெளிப்படுத்தும் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

யாழ் நகர் பகுதியெங்கும் அலங்கரிக்கப்பட்டு அன்னை பூபதியின் தியாகம் நினைவு கொள்ளப்படுகின்றது.

நாளை அன்னை பூபதி அவர்கள் உயிர்த்தியாகம் செய்த ஆறாம் ஆண்டு நினைவு நாளாகும். இந்த நாளில் பொதுக் கூட்டங்கள், கலை விழாக்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியிலும் இந் நிகழ்வுகளுக்கு பெரியளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. (தி)

## அன்னைபூபதி நினைவாக உண்ணாவிரத ஏற்பாடு

தியாகி அன்னை பூபதி நினைவு அடையாள உண்ணாவிரதங்கள் இன்று கோட்டங்களில் வட்டரீதியாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. நல்லூரில் அரியாலை திருமகள் சனசமூக நிலையம், கோப்பாயில் புத்தூர்மத்தி வீரவாணி கணேசன் சனசமூக நிலையம் உடுவில் தெல்லிப்பழை பிரிவில் கண்ணகைமுருகமூர்த்தி கோயில் முன்றல், சண்டிலிப்பாயில் நவாலி வேலக்கை பிள்ளையார்வீதி, சங்கானையில் சுழிபுரம் வைரவர் கோயில் முன்றல் தீவகப்பிரிவில் அரியாலை மணியரசன் குடியிருப்பு கார்த்திகா பாலர் பாடசாலை மைதடியில் மைதடி நாவற்குழி முருகன் கோயிலடி சாவகச்சேரியில் இத்தியடி இத்தி நாகர் கலாமன்றம் கொடிகாமம் சுட்டிபுரம் அம்மன் கோயில் (6ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு குண்டுவெடிப்பு புலனாய்வில் குழப்பம்!

## கொல்லப்பட்ட அருள்தாஸிற்கு இயக்கங்களுடன் தொடர்பில்லை

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பாக சிறிலங்கா புலனாய்வுத்துறைப் பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. இக் குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்ட அருள்தாஸிற்கு எந்தவொரு இயக்கத்துடனும் தொடர்பு எதுவும் இல்லையென விசாரணை மூலம் தெரிய வந்தமையே இதற்குக் காரணம் என அறிய வருகின்றது.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அருள்தாஸே குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த அவர் குண்டு ஒன்றை வெடிக்க வைக்க தயார் செய்து கொண்டிருந்தபோதே கொல்லப்பட்டதாகவும் பொலிசார் ஆரம்பத்தில் கருதினர். தற்பொழுது அருள்தாஸ் எந்தவொரு இயக்கத்துடனும் தொடர்பு அற்றவர் என்றும், இவர் ஏற்கனவே ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விடுதலை பிய நாடொன்றிலிருந்து வந்தவர் என்றும், அதைத்தொடர்ந்து அவர் கொழும்பிலேயே சீவித்து வந்தார் என்றும் விசாரணையில் தெரிய வந்திருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற லலித்அத்துலத்முதலி, (6ஆம் பக்கம் பார்க்க)

## இரு தினங்கள் மூடப்படும்

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளையும் நாளை மறுதினமும் அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுத் (6ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)

வடமராட்சிநோக்கி பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கொள்ளப்பட்ட ஷெல்கள் மண்டான் தொண்டமனாறு பகுதிகளில் விழுந்து வெடித்தன. இதனால் ஏற்ப (6 ஆம் பக்கம் பார்க்க)

## அருள்தாஸ் முன்பு தங்கியிருந்த விடுதி முகாமையாளர் கைது

[கொழும்பு]

கல்கிசை ஹோட்டல் ... ள்ளார் என இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளிலிரு ... சமயம் அருள்தாஸ் குண்டு ...

யாழ் நகர் பகுதியெங்கும் பாயில் நவாலி வேலக்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலுக்கு முகம் கொடுக்க கட்சியைத் தயாராக்குங்கள்

## ஜனாதிபதி விஜேதுங்கா கோரிக்கை

(கொழும்பு)

மிக விரைவில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முகம் கொடுக்க கட்சியைத் தயார் படுத்துங்கள் இதுவே கட்சிக்கு இன்றைய முக்கிய தேவை என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா ஐக்கிய தேசியக் கட்சி சகல உறுப்பினர்களுக்கும் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கண்டி உத்தியோக பூர்வவாசஸ்தலத்திலிருந்து விடுத்த வேண்டுகோளில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் தேர்தல் நடைபெறும் வரை சகல விடயங்களையும் ஒத்தி வைத்து கட்சியை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்லக்கூடிய விதத்தில் செயல்பட வேண்டும் என்றும்-

தென் மாகாண சபைத் தேர்தலை ஒரு பாடமாக கருதி இதற்கு ஏற்ப செயல்படவேண்டும்: கட்சி மிக விரைவில் தனது கிளைக் காரியாலங்களை அமைத்து அதில் அமைப்பாளர்களை தெரிவு செய்யவேண்டும் இதற்கான நடவடிக்கைகள் இப்போது கட்சியில் தொகுதி ரீதியாக நடைபெற்று வருகிறது என மேலும் அவர் கூறினார்.

# புதிதாக கட்சி எதையும் ஆரம்பிக்கப்போவதில்லை

## - ஹேமா பிரேமதாசா கூறுகிறார்

(கொழும்பு)

புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கப் போவதும் இல்லை எதிர்க்கட்சிகளுடன் இணையப்போவதும் இல்லை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியின் பாரியாரான திருமதி ஹேமா பிரேமதாசா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஐக்கிய தேசியக் கட்சிக்காகவே பாடுபட்டு அதற்காகவே உயிரை விட்டார், அவரது எந்தவொரு கொள்கையையோ அல்லது இலட்சியத்தையோ நான் மாற்றப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

# கோபாலசாமியின் பேரணியில் லட்சக் கணக்கில் கூடிய மக்கள்

## வரலாறு காணாத மக்கள்வெள்ளம் என்கிறது பி.பி.ஸி.

தி-மு-கவிலிருந்து பிரிந்து போட்டி தி-மு-கவாக செயற்படும் வை. கோபாலசாமி அணியினரால் நேற்று சென்னையில் நடத்தப்பட்ட பேரணியில் லட்சக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர் என்றும், இதற்கு முன்பாக சென்னை நகரில் இத்தகைய மக்கள் வெள்ளம் ஒருபோதும் கூடவில்லை என்றும் பி. பி. ஸி தனது சென்னை முகவரை மேற்கோள் காட்டித் தெரிவித்தது.

தமிழை ஆட்சி மொழியாக்கவும், இந்தி ஆதிக்கத்துக்கு முடிவுகட்டவும், இலங்கைப் படையால் சுட்டுக்கொல்லப்படும் தமிழக மீனவர்களின் அவலத்தை தெரிவிக்கவும், மத்திய அரசோட்டாட்சிக்கு விடைகொடுத்து கூட்டாட்சிக்கு வழிவிடு 'என்னும் கோஷங்களை எழுப்பியும் இவ் எழுச்சிப்பேரணி நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

...ற்றவர் என்றும், இவர் ஏற்கனவே ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விடுதலையானவர் என்றும் பொலிசாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. இதுவே புலனாய்வுப் பொலிசாரின் விசாரணையில் குழப்ப நிலையை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அருள்தாஸ் 1986ஆம் ஆண்டில் கொழும்புக்கு ஐரோப்

[கொழும்பு]

கல்கிசை ஹோட்டல் அருகே இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அருள்தாஸ் முன்பு தங்கியிருந்த விடுதியின் முகாமையாளர் உட்பட மூவர் குற்றப் புலனாய்வு பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இறந்தவர் மாதம் ஒருமுறை யாழ்ப்பாணம் சென்று வந்துள்ளார் என இதுவரை நடாத்தப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அருள்தாஸுடன் காயமடைந்து தற்போது சிகிச்சை பெற்று வரும் மதிவாணனும் குண்டு வெடிப்பிற்கு சில தினங்கள் முன்னதாக கண்டிக்குச் சென்று திரும்பியுள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது இதே சமயம் அருள்தாஸ் குண்டுகளை கையாள்வதில் நிபுணர் அல்ல என இச்சம்பவம் பற்றி ஆய்வு நடத்தியவர்கள் தெரிவித்துள்ளனர்

# கொழும்பு குண்டு வெடிப்புடன் 20 பேருக்கு தொடர்புண்டு

## - புலனாய்வுப் பொலிசார் தகவல்

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் நடாத்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடையவரெனக் கருதப்படும் அருள்தாஸ் உடன் இருபது பேர் கொண்ட குழு ஒன்று செயற்பட்டிருக்க வேண்டும் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த இருபது பேரை தேடிப்பிடிப்பது என்பது வைக்கோல் போரில் ஊசி ஒன்றைத் தேடுவது போன்ற செயலாக இருக்குமென பொலிசார் கருதுகின்றனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் தான் இந்த தாக்குதலை நடத்தியிருப்பின் கடந்த பத்தாண்டுகாலப் போரில் இல்லாதது போல இப்போது வெளிநாட்டவர்கள் மீது ஏன் அவர்கள் தாக்குதல் நடத்துகின்றனர் என்பது கேள்விக்குரியது என பி. பி. ஸி. தெரிவித்தது.

# பொலிஸ் காவலரண்மீது புலிகள் தாக்கு ஒரு பொலிசார் பலி; ஆயுதங்கள் மீட்பு

திருமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் காவலரண் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் ஒன்றிற்கு மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டனர்,

இரவு 7.25 மணியளவில் ஊராணைச் சந்தியில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது இத்திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது, இவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஃ ரி-56-1 ரகதுப்பாக்கிகள் - 02
ஃ வேட்டை துப்பாக்கிகள் - 02
ஃ ரவைக் கூடுகள் - 05
ஃ கோல்சர் - 01
ஃ தலைக் கவசம் - 03
ஃ நடுத்தர ரவைகள் - 97
ஃ சப்பாத்து (சோடி) - 03
ஃ பொலிஸ் தொப்பி - 02
ஃ பொலிஸ் பட்டி - 02
ஃ மழைக் கவசம் - 01
ஃ வானொலிப் பெட்டி - 01
ஃ வோக்மன் - 01
ஃ நடுத்தர காஸ்ரவைகள் - 05
ஃ கிற் பாக் - 02

# உல்லாசப் பயணிகளுக்கு பாதுகாப்பு

இலங்கை வரும் உல்லாசப் பயணிகளுக்கு சகல பாதுகாப்பும் வசதிகளும் ஏனைய வசதிகளும் அளிக்கப்படும் என சுற்றுலாத்துறை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தொண்டமான் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல்களின் நிர்வாகமும் தனது அமைச்சும் சகல

(2 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலில் அருச்சுனா

(கொழும்பு)

சிறிலங்கா கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் அருச்சுனா ரணதுங்க தீவிர அரசியலில் ஈடுபட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சார்ஜா கிண்ணத்திற்கென அணித் தெரிவில் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இவர் தனது அணித்தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ததை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் உதவி மேயர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் முன்னாள் உதவி மேயரும் சமாதான நீதவானுமான திரு. நா. த. செல்லத்துரை நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் யாழ். கூட்டுறவுச் சங்க உபதலைவராகவும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கமிகேரியன் பிராமாஸ், பன்ரம், சப்பிலி, வான்கோழிக் குஞ்சு, வெள்வடிகள், பாசைக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு இ. சுதாகரன் இல. 20 அரசடி நல்லூர் 2-ம் ஒழுங்கை (நேதாஜி ஒழுங்கை). (8043)

### வட்டுக்கோட்டையில் வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உடுக்கியவளை பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக வட்டு. தெற்கு கிராம சேவையாளர் அலுவலகம் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (8049)

### இறைச்சிக்கோழி

இறப்பு விருந்துகளுக்கு உகந்த புறவிலர் முறைப்படி வளர்ந்த இறைச்சிச் சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள், உயர் இன அடைமுட்டை, வளர்ப்புக் குஞ்சுகள் விற்பனையாகின்றன. யாழ் வீதி, உரும்பிராய்ச் சந்தி. (அன்னைபூபதி கலையரங்கம் அருகில்).
(8054)

### ஆங்கில மருத்துவம்

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இ-9016)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாளிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம்.
TASTELINE INDUSTRIES(PVT) LTD, 14, Seenler Lane, JAFFNA.
(இ-9053)

### வாடகைக்கு வீடு தேவை

நாவலர் வீதி, கே.கே.எஸ். வீதி, பலாலி வீதிக்கு இடைப்பட்ட பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை. தொடர்பு தா. ஜெகதீஸ்வரன், இல 3 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (8060)

### திருமணப்பதிவு


# கல்வித்துறையுடன் இணைந்தது விளையாட்டுத் துறை

## மெய்வல்லுநர் கருத்தரங்கில் உரை

(நல்லூர்)

கல்வித்துறையுடன் இணைந்திருப்பது விளையாட்டுத் துறை. முன்புபோல் அல்லாமல் விளையாட்டு இப்போது மறுமலர்ச்சி பெற்றுள்ளது. உடல் மற்றும் மன வலுவானதொரு எமது இளம் தலைமுறையினர் பெற்றுக் கொள்வதற்கு விளையாட்டுத் துறைசார் கற்கை நெறிகள் பெரிதும் உதவும். இவ்வாறான முயற்சிகளுக்கு எமது அமைப்பு அனைத்து ஒத்துழைப்பும் வழங்கும் இவ்வாறாக தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் கூறினார்.

யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் யாழ் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து நடத்திய மெய்வல்லுநர் விதிகள் பற்றிய ஆசிரியருக்கான கருத்தரங்கில் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு டாக்டர் ரி டபிள்யூ ஜெயகுலராசா தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி என் எதிர்வீரசிங்கம் பேசுகையில்

1952 இல் எனது பள்ளிப் பருவத்தில் நான் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் கலந்து கொண்டேன். சிறந்த பயிற்சியாளர், பயிற்சி வசதிகள் இல்லாத காலம் அது. யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் பெற்ற சாதாரண அனுபவத்துடனேயே அப்போது ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டேன். உணர்ச்சியும், பயிற்சியும், முயற்சியும்தான் மனிதனை உயர்த்துகின்றன. இவையே எனக்கு வழிகாட்டிகள். விளையாட்டில் பெற்றிருந்த தன்னம்பிக்கையை என்னால் கல்வியில் பயன்படுத்த முடிந்தது. அதனால் உயர்கல்வியையும் பெறக்கூடியதாக இருந்தது. ஆகவே விளையாட்டில் பெற்ற அனுபவத்தைக் கல்விக்கும் போராட்டத்திற்கும் இடமாற்றலாம் என்றார்.

கருத்தரங்கில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு கலாநிதி என் எதிர்வீரசிங்கம் சான்றிதழ்கள் வழங்கினார்.

# பாடசாலைகள் திருத்த அமைச்சு தயாராம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் நிர்மாண மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு பொறியியற் சேவை அமைச்சு தயாராக உள்ளது.

குடாநாட்டில் மேற்படி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலும் திருத்த வேலைக்கான நிதி ஒதுக்கிடும் வழங்கப்படும் பட்சத்தில் மேற்படி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலை வேலைப்பகுதியினர் அவற்றை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வேலைகளுக்கான கட்டடப் பொருள்களை எடுத்து வருவதற்கும் மேற்படி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதற்கு வசதியாக புதிய வங்கிக்கணக்கை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


வறிய மாணவரின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடாத்தும்

போராளிக் கலைஞர்களின்

# இன்னிசை பாடல்கள்

இடம்: புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

காலம்: 20 - 4 - 94

நேரம்: இரவு 7.00 மணிக்கு

அன்பளிப்பு: 10/-, 25/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இ-9188)


## சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம் கணிதம், சமூகக்கல்வி, சைவசமயம், சங்கீதம், வர்த்தகம், விவசாயம், மனையியல், சித்திரம், உடற்கல்வி போன்ற பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் இன்றுமுதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (35)

## ஆசிரியர் கருத்தரங்கு

யுனிசெவ் உதவியுடன் மாநகரசபை மற்றும் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு போராட்ட சூழ்நிலையில் சிறுவர்களுக்கு உதவுதல் என்னும் கைந்நூலை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி இன்று திங்கட்கிழமை தொடக்கம் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை நான்கு தினங்கள் யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 8 மணி முதல் 4 மணி வரை இடம் பெறவுள்ளது.

யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்க...

அன்னை

நடைபெறஇருக்கும் விழாவில் வைத்து வழங்கப்பட இருக்கின்றன.

பிற மாவட்டங்களில் வன்னி, முல்லை, கிளிநொச்சி, மன்னார் கல்வி வலயங்களில் அவ்வப்பகுதி மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்று தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெறும் மாணவர்களின் பட்டியலும் கோட்ட மட்டத்தில் சிறப்புப் பரிசுகளைப் பெறும் பளை, மருதங்கேணி கோட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியலும் இப்பக்கத்தில் தரப்பட்டுள்ளன. ஏனைய கோட்டத்திற்கான மாணவர்களின் பெயர்ப்பட்டியல் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும்.

# அன்னை பூபதி நினைவுப் போட்டி

## தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர்

| ஆண்டு | பாடசாலை பெயர் | மாணவர் பெயர் | பரிசு |
|---|---|---|---|
| 6 | மு. வித்தியானந்தா கல்லூரி | செபஸ்தியாம்பிள்ளை - ஜெபர்சன் | 1-ம் இடம் |
| 6 | யா. ஞானசாரியர் கல்லூரி | காயத்ரி - சத்தியசீலன் | 2-ம் இடம் |
| 6 | யா. வல்வை இந்து த. க. பா. | தமிழினி - இராமச்சந்திரன் | 3-ம் இடம் |
| 7 | யா. வேம்படி மகளிர் கல்லூரி | ஜெயானந்தரூபி - ஜெகசோதிநாதன் | 1-ம் இடம் |
| 7 | மானிப்பாய் மெமோறியல் ஆ. பா | யோகேஸ்வரன் - திவாகர் | 2-ம் இடம் |
| 7 | வ. திறந்த நிவாரண பாடசாலை | ஜெசுதாசன் - அன்ரனிரேகன் | 3-ம் இடம் |
| 8 | யா. இந்துக் கல்லூரி | அ. பார்த்திபன் | 1-ம் இடம் |
| 8 | யா. செஞ்சோலை மகளிர் பா. | கல்பனா - நேசராஜா | 2-ம் இடம் |
| 8 | வ. திறந்த நிவாரண நிலைய பா. | சுகந்தினி - கணபதிப்பிள்ளை | 3-ம் இடம் |
| 9 | யா. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி | மகேந்திரராசா - பிரவீணன் | 1-ம் இடம் |
| 9 | யா. அச்சுவேலி சரஸ்வதி வி. | துரைராசா - நந்தகுமார் | 2-ம் இடம் |
| 9 | யா, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா | சுப்பிரமணியம் - சுரேஸ்காந் | 3-ம் இடம் |
| 10 | யா. அம்பன் அ. மி. த. க. பா. | சாந்தரூபி - செல்வராசா | 1-ம் இடம் |
| 10 | யா. உடுத்துறை ம. வி. | பிரேமலதா - இராசேந்திரம் | 2-ம் இடம் |
| 10 | யா. மகாஜனக் கல்லூரி | முத்துலிங்கம் - மதிமாறன் | 3-ம் இடம் |
| 11 | யா. இந்துக் கல்லூரி | துரைராசா - பிரசாந்தன் | 1-ம் இடம் |
| 11 | யா. சங்கானை சிவப்பிரகாசம, வி | துஷ்யந்தினி - பொன்னுத்துரை | 2-ம் இடம் |
| 11 | யா. ஸ்கந்தவரோதய கல்லூரி | சாந்தலிங்கம் - செந்தில்குமார் | 3-ம் இடம் |
| 12,13 | யா. இந்துக் கல்லூரி | மகாலிங்கம் - அரவிந்தன் | 1-ம் இடம் |
| | யா. இந்துக் கல்லூரி | கணேசதாசன் - செந்தூரன் | 2-ம் இடம் |
| | கிளி. பளை மகா வித்தியாலயம் | மகாலிங்கம் - சந்திரன் | 3-ம் இடம் |

# கோட்டமட்டத்தில் பரிசு பெறுவோர்

பளைக் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 தர்ஷினி வேதநாயகம் கிளி. பளை றோ. க. த. க. பா

ஆண்டு 11 சிவானந்தம் விஜயகிரி கிளி. பளை ம. வி

ஆண்டு 12 - 13 தியாகராஜா சுஜீவன் கிளி. பளை ம. வி

மருதங்கேணிக் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 முத்துவேல் விஜயகுமார் யா. குடத்தனை கரையூர் றோ. க. த. க. பா

தேவரட்ணம் விஜயரத்னம் யா. குடத்தனை கரையூர் றோ. க. த. க. பா

அருளானந்தம் சுகதாசன் யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வி

புஷ்பலிகியா கணபதிப்பிள்ளை யா. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வி

ஆண்டு 7 சர்மிளா ஆனந்தராஜா வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி

ஆண்டு 7 அல்பிரம் தங்கராஜா டெனின்யூமின் யா. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா

ஆண்டு 8 மேரி அனுஸ்ரா அருளானந்தம் யா. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா

திரேஸ்புஸ்பம் ஜெரின்ரன் பெனடிற் யா. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா

ஆண்டு 10 முத்தையா சந்திரலிங்கம் யா. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா

செல்வராஜா செல்வரஞ்சினி யா. உடுத்துறை ம. வி

ஆண்டு 11 பொன்னம்பலம் இலட்சியவதனி யா. உடுத்துறை ம. வி

ஆண்டிஐயா குமுதினி யா. உடுத்துறை ம. வி

முத்துராஜா சிவாஜினி யா. உடுத்துறை ம. வி

ஆண்டு 12 சோமலிங்கம் லிங்கேஸ்வரன் யா. உடுத்துறை ம. வி

முத்துலிங்கம் சுதர்சன் யா. உடுத்துறை ம. வி

உல்லாசம்

ஹோட்டல்களிலும் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன. தற்போது சுமுக நிலை நிலவுகிறது என்றும் அமைச்சர் தொண்டமான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கோபாலசாமி

கது-

இப் பேரணியின் முடிவில் வை-கோபாலசாமி உரையாற்றுகையில் மத்திய மாநில

## மாணவருக்கு தேநீர் விருந்து

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தால் கடந்த வருடம் யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்ட விசேட செயலமர்வில் முழுமையாகக் கலந்துகொண்ட சகல மாணவர்களும் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களைப் பாராட்டுமுகமாக இச்செயலமர்வை நெறிப்படுத்திய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சு தேவநாயகம் அவர்களால் தேநீர் விருந்துபசாரம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இவ்விருந்துபசாரத்தில் முழுமையாக செயற்பட்ட ஆசிரியர்களையும், மாணவர்களையும் இன்று பி. ப 4 மணிக்கு தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பிற்போடப்பட்டுள்ளது

### திருமணப்பதிவு சான்றிதழ் வழங்கல்

இணுவில் மேற்கு அண்ணா சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த இதுவரை காலமும் திருமணப்பதிவுச் சான்றிதழ்பெறாத குடும்பங்களுக்கு அண்மையில் திருமணப் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

## பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரியின் வளர்ச்சி நிதிக்காக இன்று நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 15-05-94-ந் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை ஆதரவாளர்களுக்கு மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

(8072) நிர்வாகம்

யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்காக இப் பயிற்சிக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது. (24)

இப் பேரணியின் முடிவில் வை. கோபாலசாமி உரையாற்றுகையில் மத்திய மாநில அரசுகளின் போக்கைக் கடுமையாக கண்டித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களைப் பாராட்டுமுகமாக இச்சொலமர்வை நெறிப்படுத்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக

## ராசி சில்க்ஸ் ஆதரவில்

### மின்னொளியில் மிளிரும் உதைபந்தாட்டம்

# இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் – 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்

காலம்: 18 - 04 - 94 [இன்று]

நேரம்: இரவு 7. 15 மணி

பிரதம விருந்தினர்: கா. மாணிக்கவாசகர்
(யாழ். மாவட்ட அரச அதிபரும், ஆணையாளரும்)

சிறப்பு விருந்தினர்கள்:

திரு எஸ். வீ. முருகேசு (பிரபல வர்த்தகர்)

திரு. மா. அரியரெட்ணம் (பிரபல வர்த்தகர்)

### பங்குபற்றும் அணிகள்

காட்சி உதைபந்தாட்டம்

இளவாலை ஜங் கென்ரீஸ் எதிர் அரியாலை ஐக்கிய வி. கழகம்

இறுதி ஆட்டம்

யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சென் அன்ரனீஸ் வி. க. அணி

பிரவேசம் 25/- சிறுவர்களுக்கு மட்டும் 10/-

(சி-9187)

உ
சிவமயம்
திருநெல்வேலி

## ஸ்ரீ நீலாயதாக்ஷி ஸமேத ஸ்ரீகாயாரோஹண சுவாமி தேவஸ்தானம்

### (திருநெல்வேலி சிவன் கோவில்)

## மண்டலாபிஷேக பூர்த்திவிழா

### 1008 சங்காபிஷேகம்

நிகழும் பவ வருடம் சித்திரைத் திங்கள் 6ஆம் நாள் 19-4-94 செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் எம்பெருமானுக்கு சகஸ்ரசங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு அஷ்டோத்தர சங்காபிஷேகமும் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அபிஷேகத்துக்கு வேண்டிய பால், தயிர், பழவகைகள், புஷ்பம் போன்றவற்றைக் கொடுத்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று வாழ்வீர்களாக.

இங்ஙனம்
ஸ்ரீகாயாரோஹண சுவாமிதேவஸ்தானம்

(8070)

## கண்ணீர் அஞ்சலி

ஆறுகால்மடம்
அறிவொளி சனசமூக நிலைய
அங்கத்தவரான

அமரர்

## சின்னத்தம்பி சிவலிங்கம்

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியையும், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அறிவொளி சனசமூக நிலையத்தினர்,
ஆறுகால்மடம்

(8071)

## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-18

1987-ம் ஆண்டு இத்தினத்தில் கல்குடாவில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**ராஜன்** (-- பேத்தாழை - வாழைச்சேனை - மட்டு)

1988-ம் ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**மதி** (செல்லத்துரை மதியழகன் - பாலமுனை)

1991-ம் ஆண்டு கப்பல்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ரகுபதி** (நல்லதம்பி தவசீலன் - 515, 2-ம் படிவம், கந்தளாய் - திருமலை)

**லக்ஷ்மன்** (வேலாயுதம் சந்திரலிங்கம் - கரடிப் புலம், சீனக்குடா - திருமலை)

மன்னார் - பரப்புக்கடந்தான்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**றொக்கி** (வரதலிங்கம் செல்வகுமார் - இலுப்பையடி, ஆவரங்கால் மத்தி - யாழ்)

வவுனியாவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவெய்திய,

**மஞ்சலன்** (சண்முகவேல் சத்தியசீலன் - ஒலிவர் தோட்டம் - நுவரெலியா

1992-ம் ஆண்டு மன்னார் - தள்ளாடி முகாமிலிருந்து வங்காலைப் பகுதியில் வீதிகளை அப்பரவு செய்யவென வெளியேறிய சிறிலங்கா இராணுவ அணி மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் காசிம் | தர்மா** (சவுரி இரத்தினபாலா பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**லெப். நரேன்** (சந்தியோகுவிக்டர்டலிமா - சிறுக்குளம், பரப்பாங்கண்டல் - மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9184)

# விஞ்ஞானம் O\L

## பகுதி A

### அணுக்களும் மூலக் கூறுகளும்

1. சடப்பொருளின் ஆக்கக்கூறு அணு ஆகும்.
2. அணுவில் கரு என்னும் திட்டமான பகுதியும் சக்தி மட்டம் என்னும் திட்டமற்ற பகுதியும் காணப்படும். சக்தி மட்டத்தில் (e) இலத்திரன் என்னும் துகளும் கருவிற்குள் P (புரோத்தன்) N (நியூத்திரன்) என்னும் துணிக்கைகளுடன் பிறதுகள்களும் உண்டு.
3. 

| துகள் | ஏற்றம் | திணிவு | அசைவு |
|---|---|---|---|
| e | — | 1/1840 | அசையும் |
| P | + | 1 | அசையாது |
| N | நடுநிலை | 1 | அசையாது |

4. அணு நடுநிலையானது; காரணம் அதில் எதிரேற்றம் (e) நேர் ஏற்றம் (P) இரண்டும் சம எண்ணிக்கையில் காணப்படுவதால்
5. அ) அணுஎண்:- ஓர் அணுவிலுள்ள இலத்திரன் அல்லது புரோத்தன்களின் எண்ணிக்கை அணு எண்ணாகும்;
   ஆ) அணுத்திணிவு
   ஓர் அணுவிலுள்ள புரோத்தன்களினதும் நியூத்திரன்களினதும் கூட்டுத் தொகையாகும்;
6. அணுக்களின் இரசாயன இயல்பு
   a) அணுவின் தாக்கம் புரியும் இயல்பு இரசாயன இயல்பாகும் இரசாயன இயல்பு அணுவின் ஈற்றொழுக்கிலுள்ள இலத்திரன்களில் தங்கியுள்ளது;
   b) ஈற்றொழுக்கு நிரம்பிய அணு தாக்கத்தில் ஈடுபடாது இவை சடத்துவ மூலகங்கள் ஆகும்.
   c) ஈற்றொழுக்கு நிரம்பாத அணுவே தாக்கத்தில் ஈடுபடும் இது தாக்கம் புரிந்து ஈற்றொழுக்கை நிரப்பி சடத்துவ நிலையை அடையும்,
   d) ஈற்றொழுக்கு நிரம்பாத அணுக்களில் அதன் ஈற்றொழுக்கில்
      அ) நாலிலும் குறைவான இலத்திரன்களை கொண்டவை இழந்து நிரப்பும்
      ஆ) நாலிலும் கூடியளவு இலத்திரன்களை கொண்டவை ஏற்று நிரப்பும்.
      இ) நான்கு இலத்திரன்களை கொண்டவை பங்கிட்டு நிரப்பும்
   e) பொதுவாக இலத்திரன்களை இழப்பவை உலோகங்கள் எனவும் ஏனையவை அல்லுலோகங்கள் எனவும் அழைக்கப்படும்
   f) நடுநிலையான அணு இலத்திரனை இழந்தபின் அல்லது ஏற்றபின் ஏற்றத்தைப்பெறும்; இவ்வாறு ஏற்றத்தைப் பெற்ற அணுக்கள் அயன் எனப்படும்;
   g) அணு இலத்திரனை இழந்தால் நேரயனும் ஏற்றால் எதிரயனும் கிடைக்கும்;
   h) வலுவளவு:- அணு ஒன்று இழக்கும் ஏற்கும் அல்லது பங்கிடும் இலத்திரன்களின் எண்ணிக்கை வலுவளவாகும்.
   i) சமதானிகள்:- ஒரே அணு எண்ணையும் வெவ்வேறு அணுத்திணிவையும் கொண்டவை சமதானிகள் ஆகும்;

குறிப்பு:- சமதானிகளில் இலத்திரன் புரோத்தன்கள் சம எண்ணிக்கையிலும் நியூத்திரன் வேறுபட்ட எண்ணிக்கையிலும் காணப்படும்

$^{b}_{a}X$ × என்னும் மூலகத்தின் அணுஎண் a யாகவும் அதன் திணிவு எண் b யாகவும் குறிக்கப்படுவது வழக்கம்;

மூலக்கூறு:-
சடப்பொருள் ஒன்றில் தனித்து இயங்கக்கூடிய அணுக்களின் கூட்டம் மூலக்கூறு ஆகும்;

ஓரணு மூலக்கூறு:- சடத்துவ மூலகங்களினதும் உலோகங்களினதும் மூலக்கூறுகள் ஒரு அணுவால் ஆக்கப்பட்டவை.
He Ne Na

ஈரணு மூலக்கூறு:- $H_2$, $O_2$, $Cl_2$, HCl
மூவணு ,, :- $O_3$ (ஒசோன்) $CO_2$, $SO_2$
நாலணு ,, :- $NH_3$, $H_2O_3$
ஐந்தணு ,, :- $CH_4$

குறிப்பு:- 1 ஒரே இன அணுக்களால் ஆக்கப்பட்ட மூலக்கூறுகள் மூலக மூலக்கூறு ஆகும். உ-ம் $O_2$ Ne, Na, $Cl_2$
2. வெவ்வேறு இன மூலக்கூறுகளால் ஆக்கப்பட்ட மூலக்கூறுகள் சேர்க்கை மூலக்கூறுகள் ஆகும்;
உ-ம் $H_2O$ $CO_2$ NaCl

# மாணவர் அரங்கு

## பகுதி - B

### சமிபாடு

1. சிக்கலான உணவுகள் நொதியங்களினால் எளிய உணவாக மாற்றப்படுதல் சமிபாடு ஆகும்.
2. மனிதனில் கலப்புற சமிபாடு நடைபெறுகிறது;
3. சமிபாட்டுத் தொகுதியில் உள்ள உறுப்புக்கள் ஆவன;

| | | |
|---|---|---|
| 1. வாய்க்குழி | 5. சிறுகுடல் | 9. ஈரல் |
| 2. களம் | 6. பெருங்குடல் | 10. சதயி |
| 3. இரைப்பை | 7. நேர்குடல் | |
| 4. முன்சிறுகுடல் | 8. குதம் | |

4. வாய்க்குழி
   அ. மனிதனில் காணப்படும் பல்வகைகளும் தொழிலும்
   வெட்டும் பல் - வெட்டுதல் ஆ. மனிதனின் பற்குறியீடு
   வேட்டைப்பல் - கிழித்தல் வெ $\frac{2}{2}$ வே $\frac{1}{1}$ மு.க $\frac{2}{2}$ க.ப $\frac{3}{3}$
   முன்கடவாய்ப்பல், கடவாய்ப்பல் ] அரைத்தல்
   ∴ குழந்தைகளில் முதலில் தோன்றும்பல் வெட்டும்பல்
   ∴∴ வேட்டைப்பல் ஊனுண்ணிகளில் சிறத்தலைடந்து இருக்கும்;
   இ. 3 சோடி உமிழ்நீர் சுரப்பியுண்டு உமிழ்நீரைச்சுரக்கும் உமிழ்நீரில் தயலின் என்னும் நொதியம் உண்டு;
   உமிழ்நீர் கார இயல்புடையது
   உமிழ்நீரில் உள்ள தயலின் மாப்பொருளை வெல்லமாக்கும்;
   மாப்பொருள் —தயலின்→ வெல்லம்
5. களம்
   அ. தொண்டையுள் காணப்படும்
   ஆ. சுற்று சுருங்கல் அசைவு ஏற்பட்டு உணவு அதனூடாக செலுத்தப்படும்;
6. இரைப்பை:-
   அ. அகலமான பகுதி இதனால் உணவை நீண்ட நேரம் நிறுத்தி வைக்க வாய்ப்பாக உள்ளது;
   ஆ. HCl சுரக்கப்படுவதனால் அமில ஊடகமாக காணப்படுகிறது;
   இ. பெப்சின், இரனின் ஆகிய நொதியங்கள் சுரக்கப்படும்;
   ஈ. பெப்சின் தொழிற்பாடற்ற பெப்சினோசனாக சுரக்கப்பட்டு பின் HCl ஆல் தொழிற்பாடுள்ள பெப்சின் ஆக மாற்றப்படும்.
   உ. பெப்சின் புரத உணவை புரத்தியோசுக்கள் ஆகவும் பெத்தோன்களாகவும் மாற்றும்;
   ஊ. இரனின் சிறுவர்களில் பால் உணவை திரையச் செய்யும்.
   எ. இரைப்பையில் உணவை நிறுத்த இதயச்சுருக்கி குடல் வாய்ச் சுருக்கி என்பன பயன்படும்;
   ஏ. இரைப்பையின் கடைதல் அசைவு ஏற்படுவதனால் உணவை மேலும் அரைக்கவும் நொதியங்களை கலக்கவும் வாய்ப்பளிக்கும்;
   ஐ. இரைப்பை அமில ஊடகமாகையால் தயலின் தொழிற்பாடற்றுப் போக மாப்பொருளின் சமிபாடு இரைப்பையில் நிறுத்தப்படும்;
7. முன் சிறுகுடல்
   அ. U போன்று வளைந்து காணப்படும்;
   ஆ. இதனுள் சதயி சதயசாற்றையும் ஈரல் பித்தத்தையும் சுரக்கும்;
   இ. சதயசாற்றில் 1. அமிலேசு
   2. இலிப்பேசு
   3. திருச்சின் ஆகிய நொதியங்கள் காணப்படும்;
   ஈ) முன்சிறுகுடலில் உணவு அடையும் மாற்றம்;
   1. மாப்பொருள் சதய சாற்றில் உள்ள அமிலேசால் மோற்றோசாக மாறும்
   மாப்பொருள் —அமிலேசு→ மோற்றோசு
   2. புரதம் திருச்சினால் புரத்தியோசுக்களாகவும் பெத்தோன்களாகவும் மாறும்;
   3. இலிப்பிட்டு பித்தத்தால் குழம்பாக்கப்பட்டு பின் இலிப்பேசினால் கொழுப்பமிலம் கிளிசரோல் ஆகும்.
8. சிறுகுடல்
   அ) மேலும் சிறுகுடலில் மோற்றோசு, சுக்ரோசு, புரத்தியோசுக்களும் பெத்தோன்களும் சமிபாடு அடையும்.
   ஆ) புரத்தியோசுக்களும் பெத்தோன்களும் அமினோ அமிலமாக சமிபாடு அடையும்;
   இ) சிறுகுடல் நீண்டதாகவும் சடைமுளைகளைக் கொண்டு பரப்பு கூட்டப்பட்டிருப்பதாலும் சமிபாடடைந்த உணவுகளை உறிஞ்சுவதற்கேற்ற பகுதியாக காணப்படுகிறது.
   ஈ) சடைமுளைகளே சமிபாடடைந்த உணவுக்கூறுகளை உறிஞ்சுகின்றன;
   உ) சடைமுளையினுள் பாற்கலன், குருதி மயிர்த்துளைக் குழாய்கள் என்பன காணப்படும்;
   ஊ) குருதி மயிர்த்துளைக் குழாய்கள் வெல்லத்தையும் அமினோ அமிலத்தையும் உறிஞ்ச பாற்கலன் கொழுப்பமிலத்தையும் கிளிசரோலையும் உறிஞ்சும்;
9. பெருங்குடல்
   நீரின் பெரும்பகுதி இங்கு உறிஞ்சப்படுகிறது.

குறிப்பு: 1. சமிபாட்டுத்தொகுதி சீதப்படையினால் மூடப்பட்டிருப்பதனால் புரத உணவை சமிபாடடைய செய்யும் நொதியங்கள் சுரக்கப்பட்டபோதும் அது சமிபாடடைவதில்லை.
2. புரதத்தை சமிபாடு அடையச்செய்யும் நொதியங்களான பெப்சின், திருச்சின் அவற்றை சுரக்கும் கலங்களிற்குள் தொழிற்பாடற்ற பெப்சினோசன், திருச்சினோசன் ஆக காணப்படுவதனால் தம்மை சுரக்கும் கலங்களையும் அது சமிபாடு அடையச் செய்யாது.

- தொடரும் -

- சு. அருள்நேசன்

---

விஞ்ஞானத்தில் இதுவரை வெளியாகிய பாட அலகுகளுக்கான மாதிரி வினாக்கள் அடுத்த அரங்கில் வெளிவரும்;

### மாணவர்களுக்கு ஒரு சில வரிகள்

1. இவ் விஞ்ஞான பாடத்திற்கான வெளியீடு அடிப்படை விஞ்ஞான அறிவு குறைந்த மாணவர்களுக்கு உதவுவதற்காகவும் ஏனைய மாணவர்களின் மீட்டலிற்காகவும் வெளியிடப்படுகிறது.
2. க. பொ. த. (சாதாரண) தர பரீட்சைக்குரிய பாடப்பரப்பின் விஞ்ஞான தத்துவங்கள் ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு ஏற்ற வகையில் சுருக்கமாக தரப்படுகிறது.
3. குறித்த அலகுகள் பிரசுரமாகிய பின் அவற்றிற்குரிய மாதிரி வினாக்கள் வெளியாகும். இவற்றின் விடைகள் அடுத்த அரங்கில் வெளியாகும். அதற்கு முன் மாணவர்கள் விடையை முயற்சிசெய்து வைத்திருப்பது கூடப் பயனளிக்கும்.

---

# பொருளியல் A/L

### வெளிப்படையான பணவீக்கம்

"ஒரு நாட்டில் தொடர்ச்சியாக விலைகள் அதிகரிப்பதனைக் காணமுடியுமாயின் அது வெளிப்படையான (நேரடியான) பணவீக்கம் எனப்படும்."
முதலாளித்துவ பொருளாதாரங்களில் பெரு...

இலங்கையில் பணவீக்கப் போக்கினை அளவிடுவதற்கு பின்வரும் சுட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.
1. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (Colombo Consumers Price Index)
2. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

III
### ஏற்படுத்தும் காரணிகள்

பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவையாகும்.

# பணவீக்கம்
## (INFLATION)

இன்று உலகின் பல நாடுகளை, குறிப்பாக வளர்முக நாடுகளை அதிகளவுக்கு அச்சுறுத்தும் பிரச்சினையாகவும், தேசிய பொருளாதார முகாமைத்துவத்தில் அதிகளவு கவனத்தை ஈர்க்கும் விடமாகவும் பணவீக்கம் அமைந்துள்ளது. பணவீக்கம் பற்றி இக்கட்டுரையானது பின்வரும் ஐந்து பகுதிகளாக ஆராயப்படுகிறது;

1) வரைவிலக்கணம்
2) அளவிடுதல்
3) ஏற்படுத்தும் காரணிகள்
4) விளைவுகள்
5) கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

## I

### வரைவிலக்கணம்

ஒரு நாட்டின் பொது விலை மட்டமானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதனையே பணவீக்கம் என்பர். பொது விலைமட்டத்தில் ஏற்படுகின்ற சிறிய அதிகரிப்புக்கள் பணவீக்கமாகக் கருதப்படுவதில்லை. பொது விலை மட்டமானது பெரிய அளவில் அதிகரித்துச் செல்லுதலே பணவீக்கமாகக் கருதப்படும். அதேபோல வரட்சி, வெள்ளம், போக்குவரத்துத் தடங்கல் போன்றவற்றால் குறுங் காலத்தில் ஏற்படுகின்ற திடீர் விலை அதிகரிப்புகள் பணவீக்கமாகக் கருதப்படுவதில்லை. பொது விலை மட்டமானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதலே பணவீக்கமாகக் கருதப்படும்.

பொது விலைமட்டம் அதிகரித்துச் செல்லும் போது பணத்தின் கொள்வனவு சக்தி (உள்நாட்டுப் பெறுமதி) குறைவடைந்து செல்லும். இதன் காரணமாக பணத்தின் கொள்வனவுச் சக்தி தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்வதனையும் பணவீக்கம் எனலாம். இன்னொரு வகையில் நோக்குமிடத்து ஒரு நாட்டில் பணம் இருந்தும் பொருள் இல்லாத நிலைமையினை அல்லது குறைந்தளவு பொருட்களை கூடியளவு பணம் துரத்திச் செல்கின்ற நிலைமையினை இது குறிக்கின்றது.

எனவே பணவீக்கம் என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறலாம்.

"ஒரு நாட்டிலுள்ள பொருட்கள் சேவைகளின் சராசரி (பொது) விலைமட்டம் தொடர்ச்சியாகவும், பெருமளவாலும் அதிகரித்துச் செல்லும் போது பணத்தின் கொள்வனவுச் சக்தி (உள்நாட்டுப் பெறுமதி) தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதே பணவீக்கம் எனப்படும்."

பொது விலைமட்ட அதிகரிப்பைக் கொண்டே பொதுவாக பணவீக்கத்தை அளவிடுவதனால் இதனை விலை வீக்கம் (Price Flation) எனவும் அழைப்பர்.

முதலாளித்துவ பொருளாதாரங்களில் பெருமளவில் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது. ஏனெனில் அங்கு கட்டுப்பாட்டு விலைகள், பங்கீட்டு முறைகள் குறைவு என்பதால் சந்தையில் விலை அதிகரிப்புக்கள் வெளிப்படையாகவே ஏற்படுகிறது. இலங்கையில் 1977-ம் ஆண்டின் பின் இந்நிலைமை காணப்படுகிறது.

### அமுக்கிய பணவீக்கம்

விலைமட்ட அதிகரிப்பு என்பது பணவீக்கத்தின் ஓர் வெளிப்பாடாக மட்டுமே அமையும். விலைமட்ட அதிகரிப்பு இல்லாத சூழ்நிலையிலும் கூட பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவமுடியும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கடுமையான விலைக்கட்டுப்பாடுகள், பங்கீட்டு முறைகள் என்பவற்றின் மூலம் விலைமட்டத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்புக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனால் பணவீக்க விளைவுகள் காணப்படும். பொருட்கள் சேவைகளின் விலை குறைவாயினும் அதற்கேற்ப அவற்றை நுகரமுடியாத நிலை காணப்படும் இந்நிலையில் பொருளாதாரத்தில் பணவீக்கம் மறைந்து வைக்கப்பட்டுள்ளது எனக்கூறப்படும். எனவே இதனை அமுக்கிய (மறைமுக) பணவீக்கம் என அழைப்பர்.

எனவே "விலைமட்ட அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பணவீக்க விளைவுகள் காணப்படுமானால் அது அமுக்கிய பணவீக்கமாகும்" என வரைவிலக்கணப்படுத்தலாம்.

## II

### அளவிடுதல்

பணவீக்கமானது பொதுவிலை மட்ட அதிகரிப்பைப் புலப்படுத்துகிறது. பொது விலைமட்டமானது விலைச்சுட்டெண்ணால் (Price Index) அளவிடப்படுகிறது. எனவே பணவீக்கமும் விலைச்சுட்டெண்ணாலேயே அளவிடப்படுகிறது. இவ்வாறு அளவிடப்பட்டது பணவீக்க வீதம் எனப்படும்.

### பணவீக்க வீதம் (Inflation Rate)

பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்படுகின்ற பணவீக்கத்தின் அளவு பணவீக்க வீதம் எனப்படும். அதாவது "குறிப்பிட்ட இரண்டு ஆண்டுகளுக்கிடையில் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பை நூற்று வீதமாகக் கூறுவது பணவீக்க வீதமாகும்"

பணவீக்கவீதம் =

$$\frac{\text{நிகழாண்டு வி. சு. - முந்திய ஆண்டு வி. சு. (விலைச்சுட்டெண் மாற்றம்)}}{\text{முந்திய ஆண்டு விலைச்சுட்டெண்}} \times 100$$

உதாரணம்:-

1992-ம் ஆண்டின் விலைச் சுட்டெண் 1250
1993-ம் ,, ,, ,, 1325

$$\therefore \text{1993-ம் ஆண்டின் பணவீக்க வீதம்} = \frac{75}{1250} \times 100$$

= 6 வீதம்

2. மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (Wholesale Price Index)
3. உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி (Implicit GNP Deflator)

அண்மை ஆண்டுகளில் இலங்கையின் பணவீக்கப் போக்கு:-

### பணவீக்க வீதம்

| ஆண்டு | கொ. நு வி. சுட்டெண் | மொ. வி. வி. சுட்டெண் | மொ. தே. உ. சுருக்கி |
|---|---|---|---|
| 1988 | 14. 0% | 17. 8% | 11. 5% |
| 1989 | 11. 6% | 9. 0% | 9. 9% |
| 1990 | 21. 5% | 22. 2% | 20. 0% |
| 1991 | 12. 2% | 9. 2% | 10. 5% |
| 1992 | 11. 4% | 8. 8% | 10. 0% |

மூலம் மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

இத்தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் 1983-1989 காலப்பகுதியில் பணவீக்கப் போக்கு வீழ்ச்சியடைந்து, 1990இல் தீவிரமாக அதிகரித்து அதன்பின் வீழ்ச்சியடைந்துள்ளது

1990 ஆம் ஆண்டில் பணவீக்கப் போக்கு தீவிரமாக அதிகரித்தமைக்கான காரணங்கள்:

1. வளமாக்கி விலைகள்
2. நெல்லின் உத்தரவாத விலை
3. எரிபொருள் விலைகள்
4. மின் கட்டணங்கள் என்பன உயர்த்தப்பட்டமை
5. உள்நாட்டுப் போர் ஆரம்பித்தமை
6. பண நிரம்பல் அதிகரித்தமையால் நாட்டின்

---

**ஜே. கருணாகரன்**
B. A. Hons. Dip. in Ed.

---

மொத்த கேள்வி உயர்ந்தமை

1992ஆம் ஆண்டில் பணவீக்க வீதத்தைக் கட்டுப்படுத்த உதவிய காரணிகள்:

1. கோதுமை மா, பாண், மண்எண்ணெய் போன்ற முக்கிய விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட உறுதியான தன்மை
2. பெரும் போகத்தில் அரிசி, காய்கறி, செத்தல் மிளகாய் போன்றவற்றின் நிரம்பல் அதிகரித்தமை
3. திரவத் தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கைகளின் மீதான நாணயக் கொள்கையை அமுல்படுத்தியமையால் மொத்தக் கேள்வி குறைந்தமை

தொடொன்று நெருங்கிய தொடர்புடையவையாகும். எனவே இவற்றை வரையறை செய்வது சிக்கலானதாகும். இருப்பினும் பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் மரபுரீதியாக இருவகைப்படுத்தப்படுகிறது.

1. கேள்வி இழுவை (தூண்டல்) பணவீக்கம் (Demand Pull Inflation)
2. செலவு தள்ளும் (தூண்டல்) பணவீக்கம் (Cost Push Inflation)

### 1 கேள்வித் தூண்டல் பணவீக்கம்

பணவீக்கத்தினை பொருட்களின் கேள்விப் பக்கத்திலிருந்து இக் கோட்பாடு விளக்குகிறது. "பொருளியல் விலைக் கோட்பாட்டின்படி மொத்தக் கேள்வி, மொத்த நிரம்பலை விட அதிகரிக்கும் போது பண்டங்களின் விலைமட்டம் அதிகரித்து பணவீக்கம் ஏற்படுதல் கேள்வித் தூண்டல் பணவீக்கம் எனப்படும்".

இலங்கையில் கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

அ) ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு
ஆ) பண நிரம்பல் அதிகரிப்பு

### 2 செலவுத் தூண்டல் பணவீக்கம்

பணவீக்கத்தினை பொருட்களின் நிரம்பல் பக்கத்திலிருந்து இக்கோட்பாடு விளக்குகிறது. "உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றின் காரணி விலைகளான வாடகை, கூலி, சம்பளம், வட்டி, இலாபம் என்பவற்றின் அதிகரிப்பினாலும், மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பதன் மூலம் பொது விலைமட்டம் அதிகரித்து பணவீக்கம் ஏற்படுதல் செலவுத் தூண்டல் பணவீக்கம் எனப்படும்"

இவற்றுடன் நாணயப் பெறுமதி குறைவதன் காரணமாக உள்நாட்டில் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பதும் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.

உற்பத்திச் செலவு அதிகரிப்பதற்கு கூலியில் ஏற்படும் அதிகரிப்பே பெருமளவுக்கு காரணமாக அமைவதால், செலவுத் தூண்டல் பணவீக்கத்தினை "கூலித் தூண்டல் பணவீக்கம்" எனவும் அழைப்பர்.

இலங்கையில் செலவுத் தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அ) ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு

(5ஆம் பக்கம் பார்க்க)

## வாசிகசாலை அமைப்பதற்கு மக்கள் வங்கி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் மக்கள் வங்கியினால் வாசிகசாலையொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயம் வழங்கியுள்ளது. பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பகுதியில் இந்த வாசிகசாலை அமைக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

முற்றிலும் பல்கலைக் கழக மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த வாசிகசாலையில் புத்தகங்கள் வைக்கப்படவுள்ளன. (தி), (சி)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சித்திரப்பாட ஆசிரியர் சேவைக்கால கல்வி பயிற்சி வகுப்புகடந்தசனி ஆரம்பித்து எதிர்வரும் 21ஆம் திகதிவரை யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இப் பயிற்சி வகுப்புக்கள் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 30 மணி வரை நடைபெறவுள்ளதாக வலயம் 1 கல்விப்பணிமனை அறிவித்துள்ளது. (பா)


வட இலங்கை

## தொழில் நுட்பக் கல்லூரி

**DIPLOMA**

# In Computer Programming Basic Language

ஆரம்பம்:

வார இறுதி நாள் ***23-4-1994***

வார நாள் ***27-4-1994***

- ★ ***G. W. Basic or B. B. C. Basic***
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி
- ★ திறமையான மாணவர்க்கு விசேட பயிற்சிக்காலம்
- ★ புதிய நெறிகள் இளை நிறுவனங்களிலும் ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

***North Ceylon Technical Institute***

14, St. Peter's Lane, JAFFNA.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

உருத்திரபுரம் தெற்கு, உருத்திரபுரம். (தலைமையகத்தில் தொடர்பு கொள்ளவும்)

(சி-9186)



ஏப்ரல் 23 யாழோசை மன்றத்தினர் வழங்கும் ஏப்ரல் 24

மாபெரும் இசை நிகழ்வு

## செந்தமிழ் பாட்டு II

விரைவில் எதிர்பாருங்கள்

(இ-9175)


### 3 ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்: 16-08-1973

தாயக மீட்பில்: 18-04-1991

### வீரவேங்கை றொக்கி
(வரதலிங்கம் செல்வகுமார்)

இளவயதில் இன்பமதை இறுதிவரை ஏற்காமல்
போராடப் புறப்பட்ட 'றொக்கி' மவன்
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம் மண்ணைச் சிவப்பாக்கி மாவீரர் வரிசையிலே
தன்னை இணைத்துக் கொண்டவன் தான்
மடிந்துவிட்டான் பரப்புக்கடந்தானில்
போராட்ட வேளையிலே தமிழ்ப்பேசும் மக்களெல்லாம்
எம்பணியை ஆற்றிடவே புறப்படுவோம் பாசமறக்கு
றொக்கியவன் நடந்து சென்ற
பாதமதை நாம் தொடர்ந்து
ஈழமதை மீட்டிடவே
புறப்படுவோம் களத்திற்கு!

ஆவரங்கால். குடும்பத்தினர்

(8068)

### 45-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20.08.1974

உதிர்வு 05.03.1994



### செல்வி கதிர்காமநாதன் சுபாங்கி (சுபா)

அவர்களின் மறைவுதனின்

நீங்காத நினைவலைகளுக்காக

நினையும் நாம்

ஆண்டு ஸ்ரீ அபரபட்ச நவமி மாசிமதி தேய்நாளில் பூண்டு துவாதசியைப் போயடைய - ஆண்டவனைக் காணுகின்ற காரணமோ கதிர்காமநாதனின் மகள் போன திசை போற்றுகின்றோம் நின்று

பத்து மாதம் சுமந்து
பெற்றெடுத்த என்னை
பாதியில் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றாயோ
என் மகளே!

பட்டம் பதவி
பெற்றிட என்று
பாடசாலை அனுப்பி
பாதை வழி பார்த்து நின்று
பாருக்கு என் மகளை
இரை கொடுத்தேனே!

உன் கல்வியின் சிறப்பினை
ஊரெல்லாம் கதைத்திட
உன் உடன் பிறந்தோர்
உள்ளம் ....
உவகையுற்று இருக்கையில் - எம்
உள்ளத்தின் நனவுகளை
கனவாக்கி விட்டு
எங்குதான் சென்றாயோ!

அம்மா, அப்பா, சகோதரர்கள், பெரியம்மா, உற்றார், உறவினர்கள்

நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

(8014)


புத்தாண்டின் மலர்வில் புதியதோர் உதயம்!

## சேரனின் புதிய வாணிபப் பகுதி

இன்று (18-04-1994) காலை 9.21 மணியளவில் மங்களகரமான

# திறப்பு விழா

யாழ் குடாநாட்டு மக்களின் பாத்திர தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் புதிதாக

அர்ச்சுனா சாலையில் அமைகின்றது



# 'எழிற் கூடம்'



## கவலையை விடுங்கள்

தரத்தால் உயர்ந்து! நீடித்துழைத்து!! நிம்மதியைத் தரும்!!!

- அலுமினியம், எவர்சில்வர் போன்றவற்றிலான சமையல் பாத்திர வகைகள்
- மங்களகரமான நாட்களில் உபயோகிப்பதற்கு தேவையான எவர்சில்வர் பாத்திர வகைகள்
- மற்றும் பிளாஸ்ரிக், அழகுசாதனப் பொருட்கள்
- பல்வகை அழகுமிக்க பரிசுப் பொருட்கள்

இவை யாவற்றையும் ஒரே இடத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ள-

உங்கள் இல்லங்களுக்கு எழிலூட்ட இதோ!!

# எழிற்கூடம்

(சி-9174)

அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

**சிந்தனைக்கு**

திட்டமிடப்படும் மகத்தான காரியங்களைவிட, செய்துமுடிக்கும் சிறிய காரியங்களே சிறந்தவை

-பீட்டர் மார்ஷல்

# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2028

தபால் பெட்டி எண் 05


## தமிழரின் பிரச்சினை புரியாத தொன்றல்ல

தென்னிலங்கையில் இருந்து சுமார் 100 பௌத்த குருமார்கள் மே மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து அணி அணியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக சர்வமத ஒன்றியத்தின் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது; மேலும் யாழ்ப்பாணம் செல்லும் இப்பௌத்தகுருமார்கள் தமிழ்மக்களுடன் தங்கியிருந்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவது இப்பயணத்தின் பிரதான நோக்கம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பௌத்த குருமார்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு தமிழ்மக்கள் எவரும் எதிரானவர்கள் அல்லர்; அவர்கள் கடந்த காலத்தில் வந்த போது தமிழ் மக்கள் அவர்களை வரவேற்கத்தவறவில்லை; அதேபோன்று தமிழ்மக்களின் பிரச்சினைகள், அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் என்பனவற்றை அவர்கள் அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமலும் இருக்கவில்லை.

ஆனால் பௌத்தகுருமார்கள் உட்பட ஏனைய மத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களின் கடந்தகால சமாதான முயற்சிக்கு நடந்ததென்ன என்பதே இன்று தமிழ்மக்கள் மத்தியில் உள்ள கேள்வியாகும் அதாவது இச்சமாதான முயற்சிகள் எத்துணை தூரம் முன்னேற்றம் கண்டது என்பதில் உள்ள சந்தேகமே இக்கேள்விக்குக் காரணமாகும்;

இங்கு வந்த சகலரையும் வரவேற்று, உபசரித்து, மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறியபோதும், இங்கிருந்து திரும்பிச் சென்றவர்களால் ஜனாதிபதியைச் சந்திக்க முடியவில்லை; தமிழ்மக்களின் நிலைப்பாட்டையோ அன்றி இங்கு கண்டவை; கேட்டவை தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளக்கவோ முடியவில்லை; சுருக்கமாகக் கூறின் தமிழ்மக்களின் அபிலாசைகளை அரசாங்கம் காது கொடுத்துக்கேட்கவே தயாராக இருக்கவில்லை.

இந்நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து தமிழ்மக்களுடன் ஒன்றாக இருந்து அவர்களின் பிரச்சினையை அறிந்து கொள்ள முற்படுவதில் லாபம் என்ன கிட்டப் போகின்றது, ஏனெனில் தமிழ்மக்களின் பிரச்

## நேட்டோ போர் விமானத்தை சேர்பியர் சுட்டு வீழ்த்தினர்

(சரஜேவோ)

சேர்பிய டாங்கிகள் பொஸ்னியாவில் முஸ்லிம்களின் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவதாக அறிந்த நேட்டோ அணி போர்விமானங்கள் அதைத்தடுக்க அப்பகுதிக்கு விரைந்த போது சேர்பியர்களால் அப்போர் விமானங்களில் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதையடுத்து அந்த நேட்டோ அணி விமானங்கள் சேர்பியர்களை எதிர்க்காது எத்தாக்குதலையும் மேற்கொள்ளாது உடனடியாகவே திரும்பிவிட்டன. தரையில் இருந்து விண்ணிற்குப் பாயும் ஏவுகணைமூலம் பிரிட்டனின் சீஹரியர் ரக விமானத்தைச் சேர்பியர்கள் சுட்டுவீழ்த்தினர் இதன்மூலம் ஐ நா வின் தாக்குதலை நிறுத்துமாறு கோரும் எச்சரிக்கையை சேர்பியர்கள் நிராகரித்துள்ளனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொஸ்னியாவில் ஐ. நா. படைகளின் எதிர்காலம் குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் ஐ நா. படைகள் பொஸ்னியாவிலிருந்து வாபஸ் பெறுவதே சிறந்தது என சிலர் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொஸ்னியாவில் தொடர்ந்து தங்கியிருப்பது அர்த்தமற்றது என ஐ நா. அமைதிப்படை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்;

### அல்ஜீரிய முஸ்லிம் தீவிரவாதிகளுடன்

## பேச்சு நடத்த எதிர்ப்புக் காட்டிய உள்துறை அமைச்சர் பதவிநீக்கம்

(லண்டன்)

அல்ஜீரியாவின் புதிய பிரதமர் பதவியேற்ற சில நாட்களினுள் தனது அமைச்சரவையில் உள்ள இராணுவ கேர்ணலான உள்துறை அமைச்சரை பதவி நீக்கியுள்ளார். இவர் இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் அரசு பேசுவதை எதிர்த்து வந்தவர் எனக் கூறப்படுகிறது;

புதிதாக அப்துல் ரகுமான் என்ற இராணுவம் சாராத ஒருவர் உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். சட்ட விரோதமாக்கப்பட்ட இஸ்லாமிய ரட்சணிய முன்னணியுடன் அண்மையில் அரசு மேற்கொள்ளும் தொடர்பு முயற்சிகள் உண்மையானவை என்பதைக் காட்டவே புதிய பிரதமர் இந்நடவடிக்கையை எடுத்ததாகக் கூறப்படுகிறது;

## அரசியலில் இராணுவக் கலப்பு 6 ஜெனரல்கள் பதவி நீக்கம்

### தென்கொரிய ஜனாதிபதி நடவடிக்கை

(சியோல்)

தென்கொரியா ஆறு இராணுவ ஜெனரல்களை பதவி நீக்கம் செய்துள்ளது. அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு ஏற்படுவதை முடிவுக்குக் கொண்டுவரவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய - அமெரிக்கக் கூட்டுப்படைகளின் பிரதித் தளபதியும் பதவி நீக்கப்பட்டுள்ளார், மேலும் 33 இராணுவ ஜெனரல்களின் பதவிகளிலும் மாற்றம்செய்யப்பட்டுள்ளது. தென்கொரிய இராணுவத்தில் செல்வாக்குமிக்க இராணுவ ஜெனரல் ஒருவரும் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

முன்னைய ஆட்சிகளின் போது செல்வாக்கு மிக்க இவ் அதிகாரிகள் அரசியலிலும்மிகுந்த ஈடுபாடு காட்டிவந்தனர். மூன்று தசாப்தத்திற்குப் பின்னர் இராணுவத்தைச்சாராத ஒருவர் இப்போது தென்கொரிய ஜனாதிபதியாக உள்ளார். இவர் இராணுவத்தின் செல்வாக்குமிக்க பிரிவையும் ஏனைய இரகசிய அமைப்புகளையும் கலைத்து விடும்படி

### 240 கோடி டாலர் பெறுமான

## யுத்த ஜெட் விமானங்கள் இஸ்ரேலுக்கு விற்கப்படும்

(வாஷிங்டன்)

240 கோடி டாலர் பெறுமதி கொண்ட யுத்த ஜெட் விமானங்களை இஸ்ரேலுக்கு அமெரிக்கா விற்பனை செய்யவுள்ளது; இதுபற்றி கிளிண்டன் நிர்வாகம் கடந்த திங்களன்று அறிவித்துள்ளது;

இவ்வகையில்மக்டொனால் டக்ளஸ் எப்-151 ரக ஜெட் விமானங்கள் 25இஸ்ரேலுக்கு விற்கப்படவுள்ளன.

கடந்த ஜனவரியில் இந்த யுத்த விமானம் கொள்வனவு தொடர்பாக இஸ்ரேல் அறிவித்தது தெரிந்ததே.

நீண்டதூர தரைத்தாக்குதல்களை துரிதமாக நடத்தும் ஆற்றல் கொண்ட இந்த விமானங்கள் பாவனைக்காக இஸ்ரேல் வருமானால் ஈரான், சிரியா உட்பட மற்றும் முக்கிய இலக்குகள்மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது இலகுவானதாகும் எனக் கூறப்படுகிறது;

## ஹிஸ்புல்லாவின் தாக்குதல் இஸ்ரேல் சார்பு படை பலி

(பெய்ரூட்)

தென் லெபனானில் இஸ்ரேல் சார்பான தென் லெபனான் இராணுவம் எனும் தனியார் படையின் இருவர் முஸ்லிம் கெரில்லாக்களின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதியில் தென் லெபனான் இராணுவம் எனும் தனியார் படையின் ரோந்து வாகனம் தாக்குதலுக்கு இலக்கானது.

தாக்குதலை தாமே நடத்தியதாக ஈரான் சார்பு ஹிஸ்புல்லா இயக்கம் அறிவித்துள்ளது. கடந்த வியாழன் சைரோன் நகரில் இஸ்ரேலும் தென் லெபனான் தனியார் இராணுவமும் நடத்திய எறிகணை வீச்சில் மூவர் பலியானதற்கு பழிவாங்கவே இத்தாக்குதலை நடத்தியதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்தது.

## பொருளியல்

ஆ) இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் விலை உயர்வு.

இ) இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி

### கூலிவிலைச் சுழல் எறி (திரட்டு) பணவீக்கம் (Wages Spiral Inflation)

விலையும், கூலியும் ஒன்றையொன்று துரத்திச் செல்கின்ற நிலையினையே கூலி விலைச் சுழல் எறி'' என அழைப்பர்; ஒரு நாட்டின் விலைமட்டம் உயர வாழ்க்கைச் செலவும் உயரும். இதனால் தொழிலாளர் கூலி உயர்வுக் கோரிக்கையில் ஈடுபடுவர் கூலி உயர்வுகள் கொடுக்கப்பட்டால் உற்பத்திச்செலவு கூடி விலைமட்டம் உயரும். பின்பு மீண்டும் கூலியுயர்வுக் கோரிக்கை மூலம் கூலி உயரும் பலமான தொழிற் சங்கம் இருந்தால் இவ்வாறான கூலி விலைச்சுழல் எறிவீக்கம் தோன்றும்;

ஆனால் கூலிகள் உயர்த்தப்பட்டாலும் பணவீக்கம் ஏற்படாமலும் இருக்க முடியும். ஏனெனில் கூலி உயரும் போது தொழிலாளரின் உற்பத்தித்திறன் கூடி பொருள் நிரம்பல் பெருமளவில் அதிகரிப்பின் பணவீக்கம் ஏற்படமாட்டாது.

எனவே உற்பத்தித்திறன் மாறாத நிலையில் கூலி உயர்த்தப்பட்டால் இவ்வகைப் பணவீக்கம் ஏற்படலாம்;

### இறக்குமதிப் பணவீக்கம்

''இறக்குமதிப்பொருட்களின் விலை உயர்வு பணவீக்கத்திற்கு காரணியாக இருப்பின் அது இறக்குமதிப் பணவீக்கம் எனப்படும்'' இறக்குமதிகளின் விலை அதிகரிப்பு முடிவுப்பொருளாயின் நேரடியாகவும் மூலப்பொருளாயின் உற்பத்திச் செலவினத்தை அதிகரிக்கச்செய்து நிரம்பலைக் குறைந்து உள்நாட்டின் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.

### பாயும் பணவீக்கம்

''யுத்தம், பொருளாதாரத்தடை, காலநிலைப் பாதிப்புக்கள் போன்றவற்றால் பொதுவிலைமட்டம் மிகவும் வேகமாக அதிகரிப்பின் அது பாய்ச்சல் பணவீக்கம் எனப்படும்''. முதலாம் உலகப்போரைத் தொடர்ந்து ஜேர்மனியில் இவ்வாறான பணவீக்க நிலை காணப்பட்டது - 1990 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மீண்டும் ஆரம்பித்தபோது பொருளாதாரத் தடையும் கொண்டு வரப்பட்டமையால் இழக்கு - கா கை ணங்களில் இவ்வாறான பணவீக்க நிலையைத் தோற்றுவித்தது;

னையை அறிந்து கொள்ள முற்படுவதில் லாபம் என்ன கிட்டப் போகின்றது, ஏனெனில் தமிழ்மக்களின் பிரச்சினை புதியதொன்றல்ல என்பதோடு புரிய முடியாத ஒன்றும் அல்ல; இந்த வகையில் பார்க்கப் போனால், பௌத்தகுருமார்களின் இந் நடவடிக்கையானது தமிழ் மக்களினதும் தங்களினதும் நேரத்தையும் பொருளாதாரத்தையும் வீண்விரயம் செய்யும் நடவடிக்கையாக என்றே எண்ணவைக்கின்றது;

ஏனெனில் தமிழ்மக்கள் 1977ஆம் ஆண்டுத் தேர்தலின் மூலமே தமது நிலைப்பாட்டை வெளியிட்டுவிட்டனர்; அதன் பின்னர் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகளுக்கு அளித்து வரும் ஆதரவின் மூலம் தமது குறிக்கோளையும் தெளிவாக வெளிக்காட்டியும் வருகின்றனர்; இந்நிலையில் தமிழ் மக்களிடம் கலந்து பேசி அறிந்து கொள்ள என்ன இருக்கின்றது.

மற்றும் தமிழ் மக்களுக்கு இன்றுள்ள பிரச்சினையை வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு உணவு, எரிபொருள், வேலையின்மை போன்று தெரியலாம். ஆனால், இது தற்காலிகமான பிரச்சினை; உண்மையான பிரச்சினை அதுவல்ல; அதுதான் பிரச்சினையென்றால் சிலவேளை பௌத்தகுருமார்களும் ஏனைய மத அமைப்புக்களும் தீர்த்து வைத்துவிடவும் கூடும்; ஆனால் தமிழ்மக்களின் பிரச்சினை தனிப்பட்டவர்களாலோ அரசசார்பற்ற அன்றி மத அமைப்புக்களினாலோ தீர்த்து வைக்கக் கூடியவை அல்ல;

ஏனெனில் இது அரசியல் பிரச்சினை; தமிழ்மக்களின் உரிமைகளுடனும், சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் சம்பந்தப்பட்ட பிரச்சினை; இதனைத் தீர்த்து வைப்பதென்பது சிறிலங்கா அரசுடன் நேரடித் தொடர்புடையது; இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் விரும்பியோ அன்றி விரும்பாமலோ பிரச்சினைக்கு தீர்வு காணவோ அன்றி அதிலிருந்துவிலகிக்கொள்ளவோ முற்படும் நிலையிலேயே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

ஆகையினால் அரசாங்கத்தின் ஆதரவையோ அன்றி அங்கீகாரத்தையோ பெறாதவர்கள் எவரும் இப் பிரச்சினைத்தீர்வில் பெரிதாகஎதையும் சாதித்துவிடமுடியாது; இந்நிலையில் பௌத்தகுருமார்கள் அணிஅணியாக வந்தாலென்ன? அலைஅலையாக வந்தாலென்ன பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது அரசேஒழிய தமிழ்மக்கள் அல்ல. இதனால் பௌத்தகுருமார் வடக்கே வருவதினால் பிரச்சினைத்தீர்வில் முன்னேற்றம் ஏதும் கிட்டிவிடாது. வந்தோம், சென்றோம் என்ற வகையில் மட்டுமே அது பயன்படக் கூடும்;

கடந்த ஜனவரியில் இந்த ...றது;

# யுத்த நிறுத்தத்திற்கு கிளர்ச்சியாளர் நிபந்தனை

(கிகாலி)

றுவாண்டாவில் கிளர்ச்சிப் படையான றுவாண்டன் தேசபக்தி முன்னணி இராணுவத்துடன் பேச்சு நடத்த பல முன்நிபந்தனைகளை விதித்துள்ளது.

சிறுபான்மை டுட்ஸி இன கிளர்ச்சியாளர்கள் தலைநகர் கிகாலி வரை முன்னேறி தற்போது அங்கு கடும் போர் நடைபெற்று வரும் வேளையில் இந்த யுத்த நிறுத்த அழைப்பை இராணுவத்தினர் விடுத்தனர்;

இதற்கு கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதி காவலர் படை கலைக்கப்பட வேண்டும், கொலைகளுக்கு பொறுப்பான முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட வேண்டும், தமக்கு எதிராக பிரசாரங்களை ஒலிபரப்பிய தனியார் வானொலி மூடப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகளை விதித்துள்ளனர்;

றுவாண்டா ஜனாதிபதி பயணம் செய்த விமானம் கடந்த வாரம் சுட்டுவீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து றுவாண்டாவில் இனமோதல்கள் உச்சகட்டத்தை அடைந்துள்ளன.

...னையும் கலைத்து விடும்படி உத்தரவிட்டுள்ளார்;

## நாடு கடத்தல்

(வாஷிங்டன்)

இரண்டாம் உலகப் போரில் லத்வியாவில் யூதர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றிய லத்வியாவைச் சேர்ந்த நாசி இயக்க அதிகாரியான கலேஜ்ஸ்லை (80) அமெரிக்கா நாடு கடத்தியுள்ளது, இவர் அவுஸ்திரேலியாவிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். லத்வியாவைச் சேர்ந்த இவர் அவுஸ்திரேலியப் பிரஜையானார். இவர் 1959இல் அமெரிக்காசென்றிருந்தார்.

### எமது கட்சி ஆட்சி வரினும்

# தற்போதைய பொருளாதார கொள்கையே தொடரும்

### முதலீட்டாளர்களிடம் சந்திரிகா

(கொழும்பு)

பொருளாதாரக் கொள்கை மேலும் விரிவுபடுத்தப்பட்டு வர்த்தகம் மற்றும் கைத்தொழில் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படுமென்றும் எனவே வர்த்தகர்கள் எந்தக் கட்டத்திலும் அஞ்சத் தேவையில்லை என மேல்மாகாணசபைமுதலமைச்சர்சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்;

பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்வரும் தேர்தலில் ஆட்சியை கைப்பற்றும், இது 1972-ம் ஆண்டு கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிக்கும் என வர்த்தகர், வாணிபர்கள் அஞ்சுகிறார்கள். இவர்கள் இவ்வாறு அஞ்சத் தேவையில்லை இவர்கள் மேலும் தமது முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்;

தேசிய நலன் கொண்ட திட்டங்களே இன்று தேவையானது. ஆட்சிகள் மாற்றப்பட்டாலும் சிலசிலவிடயங்கள் இலகுவில் மாற்றப்படகூடாது இதில் பொருளாதார திட்டமும் அடங்கும். 1977இல் மக்களால் எமது கட்சி தூக்கியெறியப்பட்டது; இத் தவறுகளை மீண்டும் செய்ய தயாராக இல்லை;

எனவே பதினாறு ஆண்டுகளாக இட்ட முதலீடு தொடர்பாகவும், மேலும்முதலீடு செய்வது குறித்து அஞ்சத் தேவையில்லை என்றும், ஆனால் சில மாற்றங்கள் மட்டும் மேற்கொள்வதாகவும் அதாவது உற்பத்தி, கைத்தொழில் திட்டங்கள் மேலும் அதிகரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்:

தற்போது நாம் இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாக பல கைத்தொழிலதிபர்களும் வர்த்தகர்களும் பயப்படுவதாகவும் இது அவசியமற்ற பீதி எனவும் தெரிவித்துள்ளார்;

### துறைசார் பணவீக்கம்

பொருளாதாரத்தில் ஏதாவது ஒரு குறிக்கப்பட்டதுறையில் மட்டும் விலைமட்டங்கள் உயர்வது துறைசார் பணவீக்கமாகும்

1977இன் பின்பு இலங்கையில் பணவீக்கத்தை ஏற்படுத்திய காரணிகள்:

1) தேசிய உற்பத்தி அதிகரிப்பிலும் பார்க்க பண நிரம்பல் கூடுதலாக அதிகரித்தமை
2) பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்தை நிதியீட்டும் முகமாக
   - ஃ வங்கித்துறையிலிருந்து (மத்திய வங்கி, வர்த்தகவங்கி) கடன்பெறப்பட்டமை
   - ஃ அரசின் காசுநிலுவைகளின் பயன்பாடு
   - ஃ நாணய வடிவிலான வெளிநாட்டு நிதி (கடன், கொடை) பெறப்பட்டமை;
3) நேர்வரிகள் குறைக்கப்பட்டு, நேரில்வரிகள் அதிகரிக்கப்பட்டமை
4) அரசின் பாரிய முதலீட்டுத் திட்டங்களால் செலவுகள் அதிகரித்தமையும், அதற்கேற்ப உற்பத்தி அதிகரிக்காமையும்;
5) தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க அடிக்கடி சம்பளங்கள் உயர்த்தப்பட்டமை
6) எரிபொருள் விலையேற்றம்
7) தாராள வியாபாரக் கொள்கையும் தளம்பும் நாணயமாற்று வீதமும் காரணமாக இலங்கை நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி தேய்வடைந்தது: இதனால் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உயர்ந்தமை
8) கட்டுப்பாட்டு விலைகள் பலவும் நீக்கப்பட்டமை
9) இனப்பிரச்சினை காரணமாக பாதுகாப்புச் செலவின உயர்வும், உற்பத்திப் பாதிப்பும் விவசாயம், கடற்றொழில் அதிகம் பாதிப்பு
10) சனத்தொகை அதிகரிப்பு
11) வெளிநாடு சென்றவர்களைச் சார்ந்து உள்நாட்டில் வாழ்வோரது வருமானம் அதிகரித்தமை

குறிப்பு:

மேலே எடுத்து ஆராயப்பட்ட பின்வரும் விடங்கள் பணவீக்கத்தின் வகைகளாகவும் கொள்ளப்படுகின்றன

- ஃ கேள்வித் தூண்டல் பணவீக்கம்
- ஃ செலவுத் தூண்டல் பணவீக்கம்
- ஃ கூலிவிலைச்சுழல் எறி பணவீக்கம்
- ஃ இறக்குமதிப் பணவீக்கம்
- ஃ பாயும் பணவீக்கம்
- ஃ துறைசார் பணவீக்கம்
- ஃ வெளிப்படையான பணவீக்க
- ஃ அமுக்கிய பணவீக்கம்

(தொடரும்)

# மே மாதம் முதல் பௌத்தபிக்குகளை அணி அணியாக யாழ். அனுப்ப முடிவு

## சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

மே மாதம் முதல் பௌத்த பிக்குகளை அணி அணியாக யாழ்ப்பாணம் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் வண டாக்டர் ரியன்சி பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள மக்களின் அவலங்களை நேரில் கண்டறிந்து அவர்களுடன் உரையாட நூறுக்கும் அதிகமான தென்னிலங்கை பௌத்த பிக்குகள் முன்வந்திருப்பதால் அவர்களை மே மாதம் முதல் வாரத்திலிருந்து அணி அணியாக யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடுகளை தாம் செய்வதாக அவர் கூறினார்; திருகோணமலையிலிருந்து கப்பல் மூலமாகவே இந்த பௌத்த பிக்குமார் யாழ் செல்ல ஏற்பாடு செய்யப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சுமூலம் தீர்வு காண்பதை பிக்குகள் எதிர்க்கின்றனர் என்றும் போர் மூலமாக தீர்வு காண்பதையே அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் வடபகுதி மக்கள் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகிறது. இந்த அபிப்பிராயத்தை போக்கி இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில் அரசியல் தீர்வு காண்பதையே பௌத்த பிக்குமாரும் விரும்புகின்றனர் என்பதை வடபகுதி மக்களுக்கு உணர்த்த வேண்டுமென்பதில் இவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என ரியன்சி பெரேரா கூறினார்;

மக்களுடன் உறவாடி அவர்களது அவலங்களையும் பிரச்சினைகளையும் அறிந்து கொள்வதே பிக்குமாரின் இந்த விஜயத்தின் நோக்கமாகும். பிக்குமார் யாழ்ப்பாணத்தில் இருக்கும் காலத்தில் மக்களுடனேயே தங்கியிருப்பர். சந்தர்ப்பம் கிடைத்தால் புலிகளுடன் பேச்சு நடத்துவார்கள். அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் பிக்குமார் கூடவே எடுத்துச்சென்று மக்களுக்கு வழங்கவும் உத்தேசித்துள்ளனர். பிக்குகள் 10 நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர் எனவும் ரியன்சி பெரேரா கூறினார்.

## பங்கீட்டு அட்டை விபரம் வழங்காமையால் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் பங்கீட்டு அட்டைகளின் விபரம் இன்னும் முழுமையாக யாழ் செயலக புனர்வாழ்வு பிரிவுக்கு வந்து சேராமையினால் பொருள்களை பகிர்ந்தளிப்பதில் பல நெருக்கடிகளுக்கு புனர்வாழ்வு பிரிவினர் முகம் கொடுப்பதாக தெரிய வருகின்றது

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள பல நோக்கு கூட்டுறவு சங்க ரீதியாக விபரங்களைத் தந்துதவுமாறு புனர் வாழ்வுபிரிவினரால் இரு முறை வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் இதுவரை சில பிரதேச செயலகங்கள் தமது பங்கீட்டு அட்டை விபரங்களை வழங்கவில்லையென்றும் இதனால் பாவனையாளர்களுக்கு வழங்கவேண்டிய பங்கீட்டு அடிப்படையில் கொடுக்கும் பொருள்கள் அனுப்ப முடியாத நிலை இருப்பதாக தெரிய வருகின்றது

இடம்பெயர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளடங்கிய பிரதேச செயலகங்களே இதுவரை இவ்வாறான பங்கீட்டு அட்டை தகவல்களை தந்துதவவில்லை எனமேலும் தெரியவருகின்றது

அண்மையில் நடாத்தப்பட்ட திடீர் பரிசோதனை மூலம் சில பலநோக்கு கூட்டுறவுசங்கங்களில் வழங்கப்பட்ட இவ்வாறான பொருள்கள் மேலதிகமாக இருப்பில் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து முழுமையான பங்கீட்டு அட்டை விபரம் கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது (நி) (ச)

## பங்கீட்டு ம. எண்ணெய் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பாவனையாளருக்கு பங்கீட்டு அட்டை மூலம் வழங்கப்படவேண்டிய மார்ச் மாத சுற்று மண்ணெண்ணெய் இன்னும் வழங்கப்படவில்லை யென தெரியவருகின்றது.

ஓர் சங்கம் தமக்கு உரிய மண்ணெண்ணெயை இன்னும் யாழ்; செயலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளவில்லை எனத்தெரியவருகிறது.

இதேவேளை ஏப்ரல் மாத விநியோகத்திற்காக கப்பலில் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெயை சில பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் கொள்வனவு செய்து விநியோகம் செய்வதில் மிக ஆர்வம் செலுத்திவருவதாக தெரியவருகின்றது; (நி), (ச)


### வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்

### உண்ணாவிரதம் 18-4-94

தியாகதீபம் அன்னைபூபதியின் 6ம் ஆண்டு நினைவாக 18-4-94 திங்கட்கிழமை உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வில் கோப்பாய் வட்டவைக் குட்பட்ட அனைத்து வர்த்தகர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்;

தலைவர் (8074) செயலாளர்



### தவறிவிட்டது

16-04 94 அன்று பிற்பகல் 6.00 மணிக்கும் 7.00 மணிக்கும் இடையில் சரசாலைக்கும் கப்புதாவ (பருத்


## அன்னை பூபதி நினைவு போராளிகள் மட்ட போட்டி

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 6ஆம் ஆண்டு நினைவையொட்டி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொடர்பக மாவீரர் பணிமனை நடத்திய (பிரிவு நிலைசார்) போராளிகள் மட்டத்திலான மாவீரர் வரலாற்றுக் கட்டுரைப் போட்டியின் முடிவு பின்வருமாறு அறிவிக்கப்பட்டது-

### முதல் மூன்று பரிசில்களுக்குரியோர் விபரம்

| | பெயர் | விடயம் |
|---|---|---|
| 1. | உமாகாந்த் | மேஜர் சுகு |
| 2. | குலேந்திரன் | வீரவேங்கை விஸ்வம் |
| 3. | இவான் | 2ஆம் லெப்டினன்ட் நதீஸ் |

### ஆறுதல் பரிசில்களுக்குரியோர் விபரம்

| | பெயர் | விடயம் |
|---|---|---|
| ஃ | வாசந்தி | வீரவேங்கை இந்திரா |
| ஃ | கப்பன் | லெப்டினன்ட் ராஜேந்திரன் |
| ஃ | கிம்மன் | மேஜர் கஸ்ரோ |
| ஃ | ஜெயந்தினி | லெப்டினன்ட் மலையரசி |
| ஃ | கைலன் | கப்டன் தீசன் |

### சிறப்புப் பரிசுக்குரியவர்

| | பெயர் | விடயம் |
|---|---|---|
| ஃ | ரகன் | மேஜர் அவரனி |

## உழவு இயந்திர உதிரிப்பாகம் எடுத்து வருவதற்கு தடை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் ஒன்று உதிரிப்பாகங்கள் இல்லாத நிலையில் பல வருடங்களாக கட்டையில் விடப்பட்டுள்ளது.

இதற்கான உதிரிப் பாகங்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படை தடை விதித்து வருவதால் இவ்உழவு இயந்திரம் திருத்தப்படமுடியாமலுள்ளது; இதனால் இந்நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பை கூளங்களை அகற்றுவதில் தொழிலாளருக்கு பெரும் கஷ்டநிலை உருவாகியுள்ளது. (யோ)

## அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்த திட்டம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியில் திட்டமிட்ட அபிவிருத்தி திட்டங்களை தேர்தலுக்குமுன்னர் நடைமுறைப்படுத்துங்கள் அதற்கான சகல வழிகளையும் முழுமையாக பயன் படுத்துங்கள் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்;

இதற்கான அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன மற்றும் உயர் அதிகாரிகள், அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்கள் வெளிநாடு செல்வதை முழுமையாக தவிருங்கள் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்;

தேர்தலுக்கு முன்னர் மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் முழுமையான பலனை அனுபவிக்க வேண்டும் என்பதே தனது நோக்கம் என்றும் எனவே இதில் சகல அரசாங்க உயர் அதிகாரிகள் முக்கிய பங்கினை வகிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கையில் அபிவிருத்தியின் நோக்காக கொண்டு நிறைவேற்றப்பட்டவையே முக்கிய பிரசாரமாக அமைய இருப்பதாகவும் எனவே தான் இம் முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கொழும்பு

பிரேமதாசா ஆகியோர் கொலையுண்ட சம்பவங்கள் மற்றும் அண்மைய குண்டு வெடிப்புகளுடன் தொடர்புடையவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களாக இருக்கின்ற போதும் இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் எதுவும் இருப்பதாக தெரியவரவில்லை எனவும் கூறப்படுகிறது!

### அதிக விலையில்

பொறுப்பு எம்மைச் சார்ந்ததாகும். இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக எமது மக்களின் அன்றாட உணவுப் பொருள்களில் ஒன்றான அரிசியை சரியான முறையில் கட்டுப்பாட்டு விலையுடன் கிடைப்பதற்கு காவல் துறையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது; அந் நடவடிக்கையின் பேது பொது

### அன்னை பூபதி


### யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்


### கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்

## பற்றாக்குறையை காட்டி இடமாற்றங்கள் ரத்தாகின

(பளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏறக்குறைய 10 வருடங்கள் சேவையாற்றிய பின்னர் யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றத்தை ஆசிரியர்பற்றாக்குறையைக் காரணம் காட்டி இரத்துச் செய்த மாகாண அமைச்சின் செயலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது என சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்

கடந்தவாரம் பளைக்கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை நேரடியாகச் சந்தித்து நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு பொதுச் செயலாளர் தெரிவித்தார்

### முன்னாள்

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தின் தலைவராகவும், சிறைச்சாலைக் கைதிகள் நலன்புரி மேற்பார்வைக் குழுவின் உறுப்பினராகவும் கடந்த காலத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிவலிங்கம்

(பிரபல வெற்றிலை வியாபாரி - திருநெல்வேலி)

லோட்டஸ்றோட், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் 17.4.94 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற சதாசிவம் செல்லம்மாவின் மருமகனும், மோகனேஸ்வரியின் அன்புக்கணவரும், மங்களேஸ்வரி, கலாதேவி, சசிதேவி, கமலகுமாரி (ஆசிரியை கனகபுரம் அ. த. க. பா. கிளிநொச்சி), ஈஸ்வரி, லட்சுமிகாந்தன் (பிரான்ஸ்), சிவனேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும், காலம் சென்ற மணிராஜ் யோகநாதன், அருட்சோதிநாதன் (ஈழநாதம்), சந்திரபோஸ், விக்னேஸ்வரன் (ஆசிரியர் சென் ஆன்ஸ் பாளிகா மகா வித்தியாலயம் வத்தளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பிஐயா, சதாசிவம், தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரனும், விக்ரராஜ், கமல்ராஜ், தர்ஷினி, ராகுல்ராஜ், கோபாலநாதன், குணநாதன், யுவனிதா, சிவநாதன், கார்த்திகா, சுபாஷினி, கோகுலன், ஹேமப்பிரியா, நிஷாந்தன், பிரஷாந்தன், யதுர்ஷிகா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (18.4.94) காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

52/3 லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் — மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்; (சி-9189)

### N. T. செல்லத்துரை J.P.

முன்னாள் யாழ் மாநகரசபை உதவி முதல்வரும், அதன் நீண்டகால அங்கத்தவரும், பிரபல ஒப்பந்தகாரருமான திரு. நாகலிங்கம் தருமலிங்கம் செல்லத்துரை J.P. 17-4-94 (ஞாயிற்றுக்கிழமை) காலை

மணிக்கும் இடையில் சரசாலைக்கும் கப்புதாவு (பருத்தித்துறை வீதி)க்கும் இடையில் ரூபா 20,000மும், டயறியும், கடைக்கணக்குக் கொப்பியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அ. இம்மனுவேல் (தினேஷ்)

மீசாலை தெற்கு,
மீசாலை. (8073) (சாள்ஸ் ஒலி, ஒளி)


திரையரங்கில்

தினசரி 2.30, 6.00
சனி ஞாயிறு 10.30, 6.00

மதுரைவீரன்

சனி, ஞாயிறு 2.30

ஒளிவீச்சு

(கி|9182)



# சோழன் நெல் அரிசி வாணிபம்

திருமண நிகழ்வுகள்
பூப்புனித நீராட்டு விழாக்கள்
மற்றும்
விசேட நிகழ்வுகளுக்கு

**அதிவிசேட முறையில் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டரிசி வேண்டுமா?**

நிகழ்வுகளை உறுதிப்படுத்தி
உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுங்கள்

**சோழன் நெல் அரிசி வாணிபம்**

பலாலி வீதி திருநெல்வேலி

கிளை:

பருத்தித்துறை வீதி நெல்லியடி

(இ-9190)


...வைப்பட்டது; அந்நடவடிக்கையின் போது பொதுமக்களுக்கு அதிக விலையில் அரிசியை விற்றமைக்காக ஏராளமான வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை தொடர்ந்தும் எடுக்கப்படும்; அரிசியின் கட்டுப்பாட்டு விலையை மீண்டும் ஒருமுறை அறியத்தருகின்றோம்.

1) ப.நோ.கூ. சங்கங்களில் நாட்டரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 29.00

வெளிச்சந்தையில் நாட்டரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 29.50

2) ப.நோ.கூ. சங்கங்களில் திட்டல் பச்சையரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 29.00

வெளிச்சந்தையில் திட்டல் பச்சையரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 29.50

3) ப.நோ.கூ. சங்கங்களில் உடைடையல் பச்சையரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 28.50

வெளிச்சந்தையில் உடையல் பச்சையரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு கிலோ ரூபா 28.50

மேற்படி விலைகளுக்கு மேற்படாது இவ்வரிசி வகைகளை எமது மக்களுக்கு சில்லறையாக விற்பனை செய்யுமாறு சகல வர்த்தகர்களையும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்; இக்கட்டுப்பாட்டு விலைகளைக் கருத்திற்கொண்டு அரிசி வகைகளைக் கொள்வனவு செய்யுமாறு எமது மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். இவ் விலைக் கட்டுப்பாட்டு விதி முறைகளை மீறும் வர்த்தகர்கள் மீது காவல்துறையினர் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்பதை அறியத் தருகின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது

## அன்னை பூபதி

முன்பாக பளையில் பளை மகா வித்தியாலயம் பருத்தித்துறையில் புலோலி காந்தியூர் சனசமூக நிலையம், கரவெட்டியில் கட்டைவேலி, நுணுவில் பிள்ளையார் கோயில் முன்றல், உடுப்பிட்டி இலக்கணாவத்தை மேஜர் கோபு சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளில் இன்று அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று நடைபெறவிருந்த உண்ணாவிரத நிகழ்வுகள் சில நடைபெறவில்லை எனவும் அவை இன்று இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது:

சண்டிலிப்பாய் வட்டத்தில் வேலக்கைப் பிள்ளையார் கோவில் முன்றலிலும், யாழ் வட்டத்தில் அத்தியடிப் பிள்ளையார் கோவில் முன்றலிலும் கோப்பாய் வட்டத்தில் அன்னை பூபதி கலை அரங்கு உரும்பராயிலும், சண்டிலிப்பாய் வட்டத்தில் கல்வளை பிள்ளையார் கோவில் முன்றலிலும், யாழ் வட்டத்தில் [illegible]காளி கோவில் முன்றலிலும் இன்று உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

## எறிகணை

...ட்ட சேதங்கள் பற்றி தெரியவரவில்லை.

மண்டானில் ஆட்லறி ஷெல் விழுந்து வெடித்தபோது பெரும் புகைமண்டலம் தோன்றியதாக பார்த்தவர்கள் தெரிவித்தனர். (யோ)

## இரு தினங்கள்

செயலகமும் விசாரணைப் பகுதி செயலகமும் திறக்கப்பட மாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்.

...காரருமான திரு நாகலிங்கம் தருமலிங்கம் செல்லத்துரை J.P. 17-4-94 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், மகாலிங்கம் (யாழ் மாநகர பொது நூலக நாவலர் மண்டப கிளை நூலகர்), ஸ்ரீதேவராஜலிங்கம் (FRANCE) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பமணி, ஸ்ரீசுஜாவினியின் அன்பு மாமனாரும், உஷாநந்தினி, மேனகா, செந்தூரன், மயூரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற க. பொன்னுத்துரை திருமதி புஷ்பவதி பொன்னுத்துரை, திரு. வே. முத்துலிங்கம் (அச்சுவேலி தேவி மில்ஸ் உரிமையாளர்), திருமதி முத்துலிங்கம் ஆகியோரின் சம்பந்தியும், நேசம்மா, பூமணி, சிவயோகம், காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், தம்பிமுத்து, ஆறுமுகம், இரத்தினம், அன்னபூரணம் ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-4-94), பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்
மகாலிங்கம் (மகன்)

5, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (8080)

## GLADYS RASAMALAR NILES

திருமதி கிளடிஸ் இராசமலர் நையில்ஸ் 17-04-94 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஜீவர் நையில்ஸ் (Retired teacher, Jaffna College) அவர்களின் அன்பு மனைவியும் கிருபநாயகி, காலஞ்சென்ற ஜெயசீலன், அருள்நாயகி, தயாசீலன், ஜெபசீலன் ஆகியோரின் அருமைத் தாயாரும் சாவித்திரியின் அன்பு மாமியாரும் துஷ்யந்தி, கீதாஞ்சலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று [18-04-94] 2.00 மணிக்கு No 100, அம்பலவாணர் வீதி, அத்தியடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வசந்தபுரத்திலுள்ள A.O.G சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(8081) கிருபநாயகி நையில்ஸ்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.